## September 12, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், ரூ.24,307 கோடி முதலீட்டில் 49,353 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் 92 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
   - i. தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், ஒசூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், ரூ.23,303 கோடி முதலீட்டில், 44,870 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில், 53 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்,
   - ii. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் ரூ.1,003.85 கோடி முதலீட்டில் 4,483 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கும் வகையில் 39 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என ரூ.24,307 கோடி முதலீட்டில் 49,353 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் 92 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
   - iii. ஒசூரில், 5 லட்சம் சதுரஅடியில், ரூ.400 கோடி மதிப்பீட்டில் டைடல் பார்க் நிறுவப்படுகிறது. உலகத்த கரம் வாய்ந்த இந்த ஐ.டி பார்க்கில் ஐ.டி. நிறுவனங்கள், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஈர்க்கப்பட்டு, கிட்டத்தட்ட 6,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும்.
   - iv. ஒசூரில் சுமார் 2,000 ஏக்கரில் உலகத் தரம் வாய்ந்த அதிந வீன வசதிகளுடன் பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தேன். இந்தப் புதிய விமானநிலையத்துக்கு பொருத்தமான இடம் அடையாளம் காணப்பட்டு, அதைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை டிட்கோ நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இந்தப் பன்னாட்டு விமான நிலையம், மற்றுமொரு புதிய வளர்ச்சிப் பாதையில் ஒசூரை பயணிக்க வைக்கும் என்றார் முதல்வர்.
2. நாட்டின் 15-ஆவது குடியரசு துணைத் தலைவராக சி.பி.ராதா கிருஷ்ணன் (67) வெள்ளிக்கிழமை (செப்.12) பதவியேற்கிறார்.
   - i. குடியரசுத் தலைவர் மாளிகையில் காலை 10 மணிக்கு நடைபெறும் விழாவில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவருக்கு பதவிப்பிரமாணம் செய்துவைக்க உள்ளார்.
   - ii. குடியரசு துணைத் தலைவராக இருந்த ஜகதீப் தன்கர், தனது பதவியை கடந்த ஜூலை 21-ஆம் தேதி ராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து, அப்பதவிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை (செப்.9) தேர்தல் நடத்தப்பட்டது.
3. நேபாளத்தில் அரசுக்கு எதிரான மாபெரும் போராட்டத்தை நடத்திய இளைஞர்கள் தலைமையிலான 'ஜென் இஸட் குழு', 'நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் மற்றும் மக்களின் விருப்பங்களுக் கேற்ப அரசமைப்புச் சட்டத்தை திருத்தம் செய்யவேண்டும்' என்று வலியுறுத்தியது.
4. இந்திய கடற்படையின் பயன்பாட்டுக்கான நவீன முப்பரிமாண வான் கண்காணிப்பு ரேடாரை (3டி-ஏஎஸ் ஆர் - 'லான்ஸா-என்) நாட்டிலேயே முதல் தனியார் நிறுவனமாக டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் (டிஏஎஸ்எல்) நிறுவனம் தயாரித்து வழங்கியுள்ளது.
   - i. எதிரி நாட்டின் ஆளில்லா விமானங்கள் (ட்ரோன்), ஒலியைவிட வேகமாகச் செல்லும் திறன்கொண்ட சூப்பர்சோனிக் விமானங்கள், கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணைகள் உள்ளிட்டவற்றையும் துல்லியமாகக் கண்காணித்து அடையாளம் காட்டும் திறனை இந்த ரேடார் கொண்டுள்ளது. இந்த லான்ஸா-என் வகை ரேடாரை ஸ்பெயினுக்கு அடுத்தபடியாக இந்தியா முதல் முறையாகப்

பயன்பாட்டுக்கு கொண்டுவந்துள்ளது குறிப்பிடத்தக்கது என்று தெரிவிக்கப்பட்டது.

5. மணிப்பூருக்கு சனிக்கிழமை (செப்.13) பயணிக்கவிருக்கும் பிரதமர் நரேந்திர மோடி, அங்கு ரூ.8,500 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கிவைக்க உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
   i. மணிப்பூரில் மைதேயி சமூகத்தினர் மற்றும் குகி பழங்குடியினர் இடையே கடந்த 2023-இல் இனமோதல் தொடங்கிய பிறகு அந்த மாநிலத்துக்கு பிரதமர் பயணிப்பது இதுவே முதல் முறையாகும். இனமோதலில் இதுவரை 250-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்டனர். வீடிழந்த ஆயிரக்கணக்கானோர் தொடர்ந்து நிவாரண முகாம்களிலேயே தங்கியுள்ளனர்.
   ii. தலைநகர் இம்பாலில் உள்ள காங்லா கோட்டை வளாகத்திலும், சுராசந்த்பூரில் (குகி பழங்குடியினர் அதிகம் வாழும் பகுதி) உள்ள அமைதி மைதானத்திலும் பிரதமரின் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. 237 ஏக்கர் அளவிலான காங்லா கோட்டை, பண்டைய மணிப்பூர் ஆட்சியாளர்களின் அதிகார மையமாக விளங்கியதாகும். மூன்று பக்கம் அகழிகளும், ஒரு பக்கம் இம்பால் ஆறும் சூழ்ந்துள்ள இக்கோட்டை வளாகத்தில் மிகப்பெரிய போலோ விளையாட்டு மைதானம், சிறிய வனம், பண்டைய கோயில்களின் சிதிலங்கள், தொல்லியல் அலுவலகங்கள் அமைந்துள்ளன.
6. இந்தியாவில் முதல் முறையாக முப்படைகளைச் சேர்ந்த வீராங்கனைகளால் செலுத்தப்படும் பாய்மரப் படகில் உலகைச் சுற்றிவரும் கடல் பயணத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார்.
   i. ஸமுத்ர பிரதக்ஷிணா என்று பெயரிடப்பட்ட இந்தப்பயணத்தில் 10 பெண்கள் 9 மாதங்களுக்கு 26,000 நாட்டிகல் மைல்கள் தொலைவு கடலில் பயணம் செய்வார்கள்.
   ii. இந்தப் பயணத்தில் உலகின் முக்கியமான மற்றும் அபாயகரமான கடல் பகுதிகளை இவர்கள் கடக்க உள்ளனர். மும்பையில் உள்ள கேட்வே ஆப் இந்தியாவிலிருந்து வியாழக்கிழமை தொடங்கிய இந்த கடல்வழிப்பயணத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இணையவழியில் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.
7. இருதரப்பு வர்த்தகத்தை இரு நாட்டு கரன்ஸியில் மேற்கொள்வதற்கு இந்தியாவும், மோரீஷஸும் ஒருங்கிணைந்து செயலாற்றி வருகின்றன என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். உத்தர பிரதேச மாநிலம், வாரணாசியில் மோரீஷஸ் பிரதமர் நவீன்சந்திர ராமகூலத்துடன் நடத்திய இருதரப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் பிரதமர் இவ்வாறு கூறினார்.
   i. மோரீஷஸில் யுபிஐ மற்றும் ரூபே அட்டைகள் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டன. இப்போது இருதரப்பு வர்த்தகத்தை உள்ளூர் கரன்ஸியில் மேற்கொள்வதற்கு ஒருங்கிணைந்து செயலாற்றி வருகிறோம்.
   ii. எரிசக்தி பாதுகாப்பு இருதரப்புக் கூட்டுறவின் முக்கியத் தூணாகும். மோரீஷஸின் டேமரிண்ட் அருவிப் பகுதியில் 17.5 மெகாவாட் மின்உற்பத்தித் திறன் கொண்ட மிதக்கும் சூரிய மின்சக்தி அமைப்பை நிறுவ இந்தியா ஆதரவளிக்க உள்ளது.
8. டேவிஸ் கோப்பை டென்னிஸ் விளையாட்டுடன் தொடர்புடையது.
   துலீப் கோப்பை கிரிக்கெட்டுடன் தொடர்புடையது.